# ஒசூர் மாநகராட்சி

## கிருஷ்ணகிரி மாவட்டம்

# நிர்வாக அறிக்கை

# 2021–22

# ஒசூர் மாநகராட்சி

# கிருஷ்ணகிரி மாவட்டம்

# நிர்வாக அறிக்கை 2021–22

## 1 அமைப்பும் நிர்வாகமும்:

1902ம் ஆண்டு ஒசூர் நகரம் ஊராட்சியாக நிறுவப்பட்டது. சென்னை ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.45442/89 நாள்.09.06.1969ல் தேர்வு நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

இம்மாநகராட்சி தேர்வு நிலை பேரூராட்சியாக இருந்து 15.01.1992 முதல் அரசு ஆணை எண் 5 நாள் 15.01.1992 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், அதன் பிறகு அரசு ஆணை எண் 85 நாள் 22.05.1998 முதல் தேர்வு நிலை நகராட்சியாகவும், அரசாணை எண் 62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA5) நாள் 25.06.2012 முதல் சிறப்பு நிலை நகராட்சியாகவும், அரசாணை எண்.40 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.02.2019ல் 01.03.2019 முதல் மாநகராட்சியாகவும், தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 72.41 சதுர கிலோ மீட்டராகும். இம்மாநகரத்தின் மேற்கே கர்நாடக மாநிலமும், வடக்கே ஆந்திர மாநிலமும் எல்லைகளாக அமைந்துள்ளது இம்மாநகரின் சிறப்பு அம்சமாகும். இம்மாநகரம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

**எல்லை :**

இம்மாநகராட்சி கீழ்காணும் வருவாய் கிராமங்களை உள்ளடக்கியது.

1. ஒசூர்
2. சென்னத்துார்
3. ஆவலப்பள்ளி
4. ஜூஜூவாடி
5. மூக்கண்டப்பள்ளி
6. மத்திகிரி

**மக்கள் தொகை**

| வருடம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1981 | 14471 | 12658 | 27129 |
| 1991 | 22355 | 19384 | 41739 |
| 2001 | 44648 | 39746 | 84394 |
| 2011 | 126919 | 118435 | 245354 |

**அலுவலக அமைப்பு:**

இம்மாநகராட்சி அலுவலகம் நெல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாகலூர் நெடுஞ்சாலையில் மேற்கு புறமாக 4.00 ஏக்கர் நிலத்தில் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் மூன்று அடுக்கு தார்சு கட்டிடமாக இயங்கி வருகிறது.

2 1 **மேலாண்மை :**

அறிக்கையாண்டில் பணிபுரிந்துள்ள ஆணையர்களின் விவரம்:
ஆணையாளர்

| வ. எண் | பெயர் | பணியாற்றிய காலம் |
|---|---|---|
| 1 | திரு.ம.செந்தில் முருகன் | 01.04.2021 முதல் 20.11.2021 |
| 2 | திரு.கே.பாலசுப்பிரமணியன் | 21.11.2021 முதல் 31.03.2022 |

2 **உதவி செயற்பொறியாளர் (பணிகள்)**

| வ. எண் | பெயர் | பணியாற்றிய காலம் |
|---|---|---|
| 1 | திரு.வி.கார்த்திகேயன் | 01.04.2021 முதல் 06.10.2021 |
| 2 | திரு.சி.ராஜேந்திரன் | 11.11.2021 முதல் 31.03.2022 |

3 **கண்காணிப்பாளர்**

| வ. எண் | பெயர் | பணியாற்றிய காலம் |
|---|---|---|
| 1 | திரு.ப.சொ.சரவணன் | 01.04.2021 முதல் 31.03.2022 |
| 2 | திரு.பூ.சரவணன் | 01.04.2021 முதல் 31.03.2022 |

4 **உதவி செயற்பொறியாளர் (திட்டம்)**

| வ. எண் | பெயர் | பணியாற்றிய காலம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.சீனிவாசன் | 01.04.2021 முதல் 31.03.2022 |

5 **இளநிலை பொறியாளர்**

| வ. எண் | பெயர் | பணியாற்றிய காலம் |
|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.மலர்விழி | 01.04.2021 முதல் 31.03.2022 |
| 2 | திரு.எம்.பிரபாகரன் | 01.04.2021 முதல் 31.03.2022 |
| 3 | திரு.யு.வெங்கடரமணப்பா | 21.01.2022 முதல் 31.03.2022 |

6 **துப்புரவு ஆய்வர்கள்**

| வ. எண் | பெயர் | பணியாற்றிய காலம் |
|---|---|---|
| 1 | திரு.கே.மணி | 01.04.2021 முதல் 31.03.2022 |
| 2 | திரு.கே.மோகன் | 01.04.2021 முதல் 31.03.2022 |
| 3 | திரு.என்.சுந்தரமூர்த்தி | 01.04.2021 முதல் 31.03.2022 |

| | | |
|---|---|---|
| 4 | திரு.பி.கிரி | 01.04.2021 முதல் 31.03.2022 |
| 5 | திரு.ச.அன்பழகன் | 01.04.2021 முதல் 31.03.2022 |
| 6 | திரு.பு.ரமேஷ் | 01.04.2021 முதல் 31.03.2022 |

7 **வருவாய் ஆய்வர்கள்**

| வ. எண் | பெயர் | பணியாற்றிய காலம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.சுரேஷ்குமார் | 01.04.2021 முதல் 31.03.2022 |
| 2 | திரு.எம்.நாகராஜன், உதவியாளர் | 01.04.2021 முதல் 31.03.2022 |

8 **மன்றம்**

அறிக்கை ஆண்டில் நடைபெற்ற கூட்டங்கள் மற்றும் முடிக்கப்பட்டப் பொருள்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கூட்டம் | கூட்டப்பட்ட கூட்டங்கள் | நடைபெற்ற கூட்டங்கள் | முடிக்கப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | சாதாரணக் கூட்டம் | **10** | **10** | **582** |
| 2 | அவசரக் கூட்டம் | **9** | **9** | **115** |
| 3 | சிறப்புக் கூட்டம் | – | – | – |
| | மொத்தம் | **19** | **19** | **697** |

9 அறிக்கை ஆண்டில் ஒப்பந்தக்குழு, நியமணக்குழு மற்றும் வரிமேல் முறையீட்டுக் குழு கூட்டங்கள் நடைபெறவில்லை. உள்ளூர் திட்டக் குழு இம்மாநகராட்சியில் இல்லை.

10 **மேலாளுகை:**

நகர்மன்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் நியமனங்கள், தண்டனைகள், முறையீடுகள் சம்மந்தப்பட்ட விதிமுறைகளில் ஒழுங்கு கடைபிடிக்கப்பட்டுள்ளது. நிர்வாகத்திற்குத் தேவையான அச்சுக் கட்டணம், தபால் செலவுகள், பதிவேடுகள், படிவங்கள் மற்றும் இதர செலவினங்களின் தலைப்பில் அறிக்கை ஆண்டில் ஏதும் செலவிடப்படவில்லை.

இது சென்ற ஆண்டு ரூ.3345743/– ஆக இருந்தது.

11 **நிர்வாகம் :**

பொது நிர்வாகப் பிரிவில் கீழே குறிப்பிட்ட பணியிடங்கள் உள்ளது.

| வ. எண் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கண்காணிப்பாளர் | 2 |
| 2 | உதவியாளர் | 2 |
| 3 | இளநிலை உதவியாளர் | 9 |
| 4 | தட்டச்சர் | 2 |
| 5 | பதிவறை எழுத்தர் | 4 |
| 6 | அலுவலக உதவியாளர் | 2 |
| 7 | இரவுக் காவலர் | 1 |
| 8 | வருவாய் ஆய்வர் | 2 |
| 9 | வருவாய் உதவியாளர் | 10 |

அறிக்கையாண்டில் பொதுப் பிரிவு பணியாளர்களுக்கு ரூ.14776106/– செலவிடப்பட்டது. சென்ற ஆண்டில் ரூ.14915673/– ஆக இருந்தது.

12 **பொறியாளர் பிரிவில்** கீழ் குறிப்பிட்ட பணியிடங்கள் உள்ளன.

| வ. எண் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவி செயற் பொறியாளர் | 2 |
| 2 | இளநிலை பொறியாளர் | 3 |
| 3 | குடிநீர் பணி மேற்பார்வையாளர் | 1 |
| 4 | வரைவாளர் | 1 |
| 5 | நீரேற்று நிலைய உதவியாளர் | 1 |
| 6 | மின்கம்பி உதவியாளர் | 5 |
| 7 | மின் கம்பியாளர் | 5 |
| 8 | குழாய் பொருத்துநர் | 3 |
| 9 | நீர்த்தேக்க தொட்டி காவலர் | 2 |
| 10 | குழாய் திறப்பாளர் | 10 |
| 11 | குழாய் ஆய்வாளர் | 3 |
| 12 | பணி ஆய்வர் | 2 |
| 13 | ஒட்டுநர் | 7 |
| 14 | சங்கிலியர் | 1 |

அறிக்கையாண்டில் பொறியியல் பிரிவு பணியாளர்களுக்கு ரூ.34392034/– செலவிடப்பட்டது. சென்ற ஆண்டில் ரூ.25571472/– ஆக இருந்தது.

13 **வரி வசூல் பணியாளர்கள்**

அறிக்கையாண்டில் 2 வருவாய் ஆய்வர்கள் மற்றும் 9 வருவாய் உதவியாளர்கள் பணியாற்றி வந்துள்ளனர். அறிக்கை ஆண்டில் பணியாளர்களுக்கு மொத்த செலவு ரூ.7019100/– செலவிடப்பட்டது. சென்ற ஆண்டு ரூ.6932952/– செலவிடப்பட்டுள்ளது.

14 அறிக்கை ஆண்டில் நிர்வாகம் எதிர்த்து தொடர்ந்த வழக்குகளின் எண்ணிக்கை 31 ஆகும். அறிக்கை ஆண்டில் வழக்குகளுக்காகவும், வழக்கறிஞர் கட்டணமும் சேர்த்து ரூ.244000/– செலவிடப்பட்டுள்ளது.

15 **சாலை பராமரிப்பு**

அறிக்கை ஆண்டில் சாலைகள் பராமரிப்பதற்கு சாதாரணமாக ரூ. 572280762/– செலவு செய்யப்பட்டது. சென்ற ஆண்டு ரூ.435375827/– ஆகும்.

16 இம்மாநகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகள் விவரம்

| வ. எண் | சாலை விவரம் | 2014–15 கிலோ மீட்டர் |
|---|---|---|
| 1 | தார் சாலை | 325.25 |
| 2 | சிமெண்ட் சாலை | 163.48 |
| 3 | மண் சாலை | 133.50 |
| 4 | கப்பி சாலை paver Block | 13.02 |
| | **மொத்தம்** | **635.25** |

அனைத்து சாலைகளும் திருப்திகரமான முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது.

## 17 ஓய்வு விடுதி, சத்திரம்

இம்மாநகராட்சியில் ஓய்வு விடுதி மற்றும் சத்திரங்கள் எதுவும் இல்லை.

## 18 வாகனங்கள்

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட வாகனங்கள், பொது சுகாதார பணிகளுக்கும் மற்றும் குடிநீர் விநியோகத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டது.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குடிநீர் டேங்கர் லாரி | 4 |
| 2 | குப்பை லாரி | 9 |
| 3 | ஈப்பு வண்டி | 3 |
| 4 | ஆட்டோ | 25 |
| 5 | டிராக்டர் | 1 |
| 6 | காம்பாக்டர் | 1 |
| 7 | J C B | 1 |
| 8 | நாய்கள் பயண வாகனம் | 1 |
| 9 | BOV | 125 |
| 10 | Mini Hitachi | 1 |
| 11 | சாலை துப்புரவு பணி செய்யும் வாகனம் | 1 |

அறிக்கையாண்டில் வாகனங்களின் பராமரிப்பிற்காகவும், டீசல் எரிபொருள்களுக்காகவும் ரூ.2040375/– செலவிடப்பட்டுள்ளது.

## 19 தெரு விளக்குகள் விவரம்

| வ. எண் | தெரு விளக்குகள் விவரம் | 2014–15 எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | LED | 2943 |
| 2 | SVL | 817 |
| 3 | CFL | 5434 |
| 4 | High must light | 144 |
| 5 | Minimash light | 300 |
| 6 | Others | 3596 |
| | **மொத்தம்** | **13234** |

அறிக்கையாண்டில் மின் கட்டணமாக மின்சார வாரியத்திற்கு ரூ.140524788/– செலுத்தப்பட்டது. தெரு விளக்குகள் பராமரிப்பிற்காக ரூ.6243338/– செலவிடப்படுகிறது.

## 20 முழுக்கடன் சாலை திட்டம்

இத்திட்டம் இவ்வாண்டு இந்நகராட்சியில் செயலாக்கத்தில் இல்லை.

## 21 SJSRY

இத்திட்டத்தின் மூலம் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

22 **2021–2022ம் ஆண்டில் செய்யப்பட்ட பணிகள்**

| நிதி | பணிகள் | தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| பொதுநிதி | 199 | 3518.00 |
| குடிநீர் நிதி | 236 | 2601.00 |
| கல்விநிதி | 42 | 684.00 |
| **திட்டப்பணிகள்** | | |
| 15 வது நிதிக்குழு மான்யம் (2020–21) | 44 | 1321.99 |
| Model City (Tamil nadu sustainable urban development project (2020–21) | 3 | 3398.00 |
| NULM 2020-21 | 1 | 103.00 |
| CGF 2020-21 (மூலதன மான்ய நிதி) | 2 | 400.00 |
| இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் வட்டி நிதி 2021–22 | 8 | 65.00 |
| 15 வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Health sector) | 9 | 222.00 |
| 15 வது நிதிக்குழு மான்யம் 2021–22 | 19 | 475.00 |

23 **எரி வாயு தகன மேடை**

ஏற்கனவே உள்ள மாநகராட்சி சுடுகாட்டில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி முடிவுற்று ரோட்டரி சங்கம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. 2021–22 ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் மத்திகிரி மயானத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் (Bio Gas) நடைப்பெற்று வருகிறது.

24 **புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

இத்திட்டம் மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்படுவதில்லை.

25 **தனிப் பள்ளிகள், பொது நூல் நிலையங்கள்**

இம்மாநகராட்சியில் வாசக சாலை படிப்பகங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை. ஆனால் மாவட்ட நூலக ஆணைக்குழுவினால் ஒரு நூல் நிலையம் நகரில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் இரண்டு நூலக கட்டிடங்கள் கட்டப்பட்டு நூலகத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

26 **பொது வானொலி**

அறிக்கையாண்டில் பொது வானொலி ஏதும் பராமரிக்கப்படவில்லை.

27 **பொது சுகாதாரம்**
**மருத்துவமனை**

இம்மாநகராட்சியால் யாதொரு மருத்துவமனையும் பராமரிக்கப்படவில்லை. மாநகரில் அரசினர் மருத்துவமனை ஒன்றும், நகர்நல மையம் 5ம், இம்மாநகராட்சி ஏழை மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. இவையன்றி, தனியார் மருத்துவமனைகளும் இயங்குகிறது.

**28 மருத்துவ இல்லங்கள்**

இம்மாநகராட்சியில் மருத்துவ இல்லங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**29 பொது சுகாதார அமைப்பு மற்றும் பணியாளர்களின் விவரம்**

| வ. எண் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | துப்புரவு ஆய்வர் | 6 |
| 2 | துப்புரவு பணிமேற்பார்வையாளர் | 12 |
| 3 | துப்புரவு பணியாளர்கள் | 240 |

அறிக்கை ஆண்டில் பொது சுகாதாரப் பராமரிப்பு செலவு பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் பொது சுகாதாரப் பணிகளுக்கு ரூ.96993506/– ஆகும். சென்ற ஆண்டில் ரூ.90969780/– ஆக இருந்தது.

**30 பொது நலப் பணிகள்**

இம்மாநகராட்சி பகுதியில் பொது மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படா வண்ணம் அனைத்து முன்னெச்சரிக்கை பணிகளும் மேற்கொள்ளப்பட்டது. கொசுக்கள் அழிப்பு மற்றும் கட்டுபாடு பணிகளும் அறிக்கை ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**31 பிறப்பு விகிதம் மற்றும் மகப்பேறு நிவாரணம்**

பிறப்பு இறப்பு பதிவுகளை மாநகராட்சி துப்புரவு ஆய்வர்கள் கவனித்து வருகிறார்கள். அறிக்கை ஆண்டில் மொத்த பிறப்பு 3683. சென்ற ஆண்டில் மொத்த பிறப்பு 3681. அறிக்கை ஆண்டில் மொத்த இறப்பு 1751. சென்ற ஆண்டில் இறப்பு 1259 ஆகும்.

32 இம்மாநகராட்சியில் **தாய்சேய் நல விடுதிகள்** ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**33 இறப்பு விகிதம் மற்றும் தொற்று நோய்கள்**

அறிக்கையாண்டில் பதிவான இறப்பு 1751 இறந்து பிறந்தவை 3. சென்ற ஆண்டில் இறப்பு 1259.

| | | |
|---|---|---|
| 1 | காலரா | இல்லை |
| 2 | அம்மை | |
| 3 | பிளேக் | |
| 4 | மலேரியா | |
| 5 | டிப்திரியா | |
| 6 | சீதபேதி | |
| 7 | காய்ச்சல் | |
| 8 | பிற மூச்சுப்பை நோய்கள் | |
| 9 | பிற காரணங்கள் | |

**34 காலரா, வாந்தி பேதி**

அறிக்கை ஆண்டில் நகர எல்லைக்குள் காலரா மற்றும் வயிற்றுப் போக்கு நோய் பரவாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**35 உணவு கலப்படம்**

உணவு கலப்பட தடைச்சட்டம் அக்டோபர் 2011 முதல் திருத்தப்பட்டு உணவு பாதுகாப்பு ஆணையரகம் வசம் மாற்றப்பட்டுள்ளது.

**36 அபாயமும் அருவருக்கத்தக்க வணிகங்கள்**

உரிமையாணை கோரிய எல்லா இடங்களும் ஆய்வு செய்யப்பட்டது. 1939ம் ஆண்டு பொது சுகாதாரச் சட்டம் முறைகளின்படி விதிகளை மீறியவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

உரிமையாணை பெறாத நபர்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நடப்பு ஆண்டில் உரிமங்களுக்கு ரூ.19298229/– வசூலிக்கப்பட்டது. சென்ற ஆண்டில் ரூ.10810131/–வசூலிக்கப்பட்டது.

**37 சந்தைகளும் திருவிழாக்களும்**

| வ. எண் | திருவிழாவின் பெயர் | கூடும் மக்களின் சுமாரான எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சந்திர சூடேஸ்வரர் கோயில் திருவிழா<br>இடம் – தேர்பேட்டை, ஒசூர் | 3,00,000/– |

திருவிழா நடைபெறும் இடங்களுக்கு போதிய சுகாதார வசதிகள், குடி தண்ணீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. மேற்படி திருவிழா நடைபெற்றபோது எவ்வித தொற்று நோயும் பரவவில்லை.

**38. குடிநீர் வழங்கல்**

இம்மாநகராட்சிக்கு உள்ளூர் ஆழ்துளை கிணறுகள் மற்றும் ஒகேனேக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒகேனேக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாள் ஒன்றுக்கு தற்போது மொத்தம் வழங்க வேண்டிய குடிநீர் அளவு (Intermediate) 7.81 MLD ஆகும். ஆனால் கடும் வறட்சியின் காரணமாக ஒகேனேக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தற்போது 9.00 MLD அளவிற்கு குடிநீர் பெறப்பட்டு வருகிறது. மேலும் 544 உள்ளூர் ஆழ்துளை கிணறுகள் மூலம் தற்போது 17.00 MLD யும் பேரண்டப்பள்ளி Booster Station மூலம் 1.00 MLD ஆக தொத்தம் 27 ம் குடிநீர் பெறப்பட்டு மொத்தம் 27.00 MLD–ன் மூலம் நாள் ஒன்றுக்கு 90 LPCD வீதம் 45 வார்டுகளுக்கும் இரண்டு தினங்களுக்கு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| ஆண்டு வருமானம் சுமார் | ரூ.47784037/– |
| ஒகேனக்கல் கூட்டு குடிநீர் | ரூ.36122095/– |
| அறிக்கையாண்டில் இந்த தலைப்பின் கீழ் செலவு | ரூ.47784037/– |

இந்த ஆண்டில் 37190 வீட்டு இணைப்புகளும் உள்ளது. இதன் மூலம் அறிக்கை ஆண்டில் ரூ.34251077/– வருமானம் வந்துள்ளது.

## 39. தொழிற்சாலைகள்

இம்மாநகரில் அறிக்கை ஆண்டில் மின்னணு தொழிற்பேட்டை மற்றும் தொழிற்சாலைகள் உள்ளன.

## 40. மரங்கள் வளர்ப்பும் பூங்காக்களும்

மாநகராட்சி அலுவலகம், நீர்நிலைத் தேக்கத் தொட்டிகள் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் உள்ள மரங்களும், செடிகளும் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 41. பூங்காக்கள்

ஒசூர் மாநகராட்சியில் இராமநாயக்கன் ஏரிக்கு அருகாமையில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்படி பூங்கா அமைந்துள்ளது. இம்மாநகராட்சியால் நடை பயிற்சி தளம் , தோராண நுழைவு வாயில், சாலைகள், குடிநீர் வசதி போன்ற அத்தியாவசிய வசதிகளுடன் பூங்காவினை ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தயார் நிலையில் உள்ளது.

## 42. பயன்தரும் முயற்சிகள்

| | |
|---|---|
| 1 | பேருந்து நிலைய சுங்கம் |
| 2 | வாரச் சந்தை மற்றும் தினசரி மார்க்கெட் |
| 3 | நடைபாதை கடைகள் |
| 4 | ஆடு அடிக்கும் தொட்டி |
| 5 | மாமிசக் கடைகள் |
| 6 | கட்டணக் கழிப்பிடங்கள் |
| 7 | இருச் சக்கர வாகனம் நிறுத்துமிடம் |
| 8 | நகராட்சிக்கு சொந்தமான கடைகள் |
| 9 | புதிய பேருந்து நிலையக் கடைகள் |
| 10 | ஆவலப்பள்ளி மயில் ஏரி மீன் குத்தகை |
| 11 | ஆவலப்பள்ளி சர்கார் ஏரி மீன் குத்தகை |
| 12 | சென்னத்தூர் தேவன் ஏரி மீன் குத்தகை |
| 13 | சென்னத்தூர் வர்தய்யன் ஏரி மீன் குத்தகை |
| 14 | சென்னத்தூர் பட்டாளம்மன் ஏரி மீன் குத்தகை |
| 15 | சென்னத்தூர் கசுவகட்டா ஏரி மீன் குத்தகை |
| 16 | சென்னத்தூர் கிருஷ்ணாராவ் ஏரி மீன் குத்தகை |
| 17 | ஜூஜூவாடி வெங்கடேசன் ஏரி மீன் குத்தகை |
| 18 | ஜூஜூவாடி வெங்கடப்பன் ஏரி மீன் குத்தகை |
| 19 | ஜூஜூவாடி சாந்தபுரம் ஏரி மீன் குத்தகை |
| 20 | மூக்கண்டப்பள்ளி சீதாராமன் ஏரி மீன் குத்தகை |
| 21 | மூக்கண்டப்பள்ளி லஷ்மணராவ் ஏரி மீன் குத்தகை |
| 22 | மூக்கண்டப்பள்ளி தாதா ஏரி மீன் குத்தகை |
| 23 | ஒசூர் நகரம் தொட்டப்பன் ஏரி மீன் குத்தகை |
| 24 | ஒசூர் நகரம் இராமநாயக்கன் ஏரி மீன் குத்தகை |

## புதிய பேருந்து நிலையம்

புதிய பேருந்து நிலையம் 2010ம் ஆண்டு, ஆகஸ்டு 05ம் தேதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது. மேற்கண்ட பேருந்து நிலையத்தில் 53 பேருந்துகள் நிறுத்தும் வண்ணம் கட்டப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையம் 'A' Class அங்கீகாரம் பெறப்பட்டு, பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்கக் கட்டணம் ரூ.15/– வசூலிக்கப்பட்டு வருகிறது. நாள் ஒன்று சுமார் 700 பேருந்துகள் வந்து செல்கின்றன. இதன் மூலம் நடப்பு ஆண்டிற்கு ரூ.3648173/– வருமானம் கிடைக்கிறது.

## வாரச் சந்தை மற்றும் தினசரி மார்க்கெட்

ஒசூர் மாநகரில் மாநகராட்சிக்கு சொந்தமான வாரச் சந்தை மற்றும் தினசரி மார்க்கெட், இராயக் கோட்டை ரோட்டில் அமைந்துள்ளது. மேற்படி வாரச் சந்தை மற்றும் தினசரி மார்க்கெட் மூலம் ஆண்டிற்கு ரூ.1386000/– வருமானம் கிடைக்கிறது.

## நடைபாதை கடைகள்

ஒசூர் மாநகரில், நடைபாதை கடைகள் மூலம் ஆண்டிற்கு ரூ.11040000/– வருமானம் கிடைக்கிறது.

## ஆடு அடிக்கும் தொட்டி

மாநகராட்சிக்கு சொந்தமான நவீன ஆடு அடிக்கும் தொட்டி எம்.ஜி.ஆர். தினசரி மார்க்கெட் வளாகத்தில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் ஒரு ஆடு வதை செய்ய ரூ.30/– வசூல் செய்யப்படுகிறது. இதன் மூலம் ஆண்டிற்கு ரூ. 851212/– வருமானம் கிடைக்கிறது.

## மாமிசக் கடைகள்

மாநகராட்சி பகுதிகளில் மாமிசக் கடைகள் மூலம் ஆண்டிற்கு ரூ.856000/– வருமானம் கிடைக்கிறது.

## கட்டணக் கழிப்பிடங்கள்

ஒசூர் மாநகராட்சிக்கு சொந்தமான எம்.ஜி.ஆர்.தினசரி மார்க்கெட் வளாகத்தில் ஒரு கட்டணக் கழிப்பிடம் செயல்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் ஆண்டிற்கு ரூ.65000/– வருமானம் கிடைக்கிறது.

புதிய பேருந்து நிலையத்தில் கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் கட்டணக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. மேற்படி இடங்களில் ஆண்டிற்கு ரூ.4742870/– வருமானம் கிடைக்கிறது.

## இருச் சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம்

ஒசூர் மாநகராட்சிக்கு சொந்தமான இருச் சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், பாகலூர் ஹட்கோ பகுதியில் அமைந்துள்ளது. மேற்படி இடத்தில் ஆண்டிற்கு ரூ. 41475/– வருமானம் கிடைக்கிறது.

புதிய பேருந்து நிலையத்தில் கிழக்கு மற்றும் மேற்கில் தலா ஒரு இடத்தில் இருச் சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. மேற்படி இடங்களில் ஆண்டிற்கு ரூ.4315500/– வருமானம் கிடைக்கிறது.

## புதிய பேருந்து நிலையக் கடைகள்

புதிய பேருந்து நிலையத்தில் மொத்தம் 76 கடைகள் மற்றும் இரண்டு உணவு விடுதிகள் கட்டப்பட்டுள்ளது. இதில் இதுவரை 55 கடைகள் மற்றும் இரண்டு உணவு விடுதிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகராட்சி அலுவலகம் அருகில் 38 கடைகள், வணிக வளாக 24 கடைகள், வங்கி வளாக 20 கடைகள், காந்தி சிலை அருகில் 5 கடைகள் மற்றும் மத்திகிரியில் 30 கடைகள், மூக்கண்டப்பள்ளியில் 4 கடைகள், ஜுஜுவாடியில் 3 கடைகள், காலிமனை 20 மொத்தம் 256 இதில் காலியாக உள்ளது 68, குத்தகையில் உள்ளது 188 ஆகும். இதன் மூலம் ஆண்டு வருமானம் ரூ.9893747/– வருமானம் கிடைக்கிறது.

## 43 நகரமைப்பு பிரிவு

ஒசூர் மாநகராட்சியில் ஒசூர் மாநகராட்சி சட்டம் 2019ன் கீழ் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதி 2019 செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நகரம் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளாக மாறி வருவதால் மக்கட்தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. அதனால் நகரைச் சுற்றிலும் உள்ள நிலங்கள், குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி அடைந்து வருகிறது. இம்மாநகராட்சியில் ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழும்ம் என்ற ஒரு அலுவலகம் இயங்கி வருகிறது. இதற்கு தலைமையாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களை தலைவராகவும், அலுவலக உறுப்பினர் மற்றும் செயலர் ஒருவரும் இருந்து வருகிறார்கள்.

இம்மாநகராட்சி எல்லைக்குள் கட்டப்பட இருக்கும் 10000 சதுர அடி பரப்பளவிலுள்ள 8 குடியிருப்புகள் மற்றும் 2000 சதுர அடி வரையிலுள்ள வணிக கட்டிடங்களுக்கு அதிகார பகிர்வுள்ள மாநகராட்சியால் கட்டிட மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. புதிய குடியிருப்பு கட்டிடங்களின் கடைகள், தங்கும் விடுதிகள், தொழிற்சாலைகள், கட்டிடங்கள் ஆகியவைகளுக்கான கட்டிட உரிமம் பெற தயாரிக்கப்பட்ட வரைப்படங்களை ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் அலுவலகத்தின் திட்ட அனுமதி பெறப்ப் பின்னர் இம்மாநகராட்சியில் கட்டிட உரிமம் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ஆகியவைகளைப் பெற்று கட்டிட உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சியில் கட்டி வரைப்படங்களின் இடத்தினை இளநிலை பொறியாளர் திரு.பிரபாகரன் மற்றும் திருமதி.மலர்விழி ஆகியோர் பார்வையிட்டு உரிமம் வழங்க பரிந்துரை செய்ய பணிபுரிகின்றனர். செயற்பொறியாளர் (திட்டம்) உதவி திரு.ஆர்.சீனிவாசன் பணிபுரிகிறார் மற்றும் நகரமைப்பு பிரிவில் ஒரு சங்கிலியாள் பணிபுரிந்து வருகிறார்.

## 44 அங்கிகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்டங்கள்

இம்மாநகராட்சியில் நகரமைப்பு திட்டங்கள் ஏதும் இல்லை. ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமத்தில் ஒசூர் புதுநகர் வளர்ச்சி பகுதிக்கான முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலில் உள்ளது.

## 45 கட்டிட உரிமம்

அறிக்கை ஆண்டில் இந்நகரில் கட்டிடங்கள் கட்ட 783 மனுக்கள் வரப்பெற்று ஆய்வு செய்யப்பட்டு 823 மனுக்களுக்கு கட்டிட உரிம்ம் வழுங்கப்பட்டுள்ளது. 40 மனுக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. நிலுவை ஏதும் இல்லை. இதன் மூலம் வருமானம் ரூ.11936320/– ஆகும். தற்காலிக அனுமதி அறிக்கை ஆண்டில் ஏதும் வழங்கப்படவில்லை.

## 46 அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்கள்

அறிக்கை ஆண்டில் அனுமதி பெறாமல் அனுமதிக்கு மாறுதலாக கட்டிடம் கட்டும் கட்டிட உரிமையாளர்கள் 85 நபர்களை கட்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்கு ஒசூர் மாநகராட்சி சட்டம் அறிவிப்பு 2019ன் கீழ் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### அனுமதியற்ற மனைப்பிரிவில் வரன்முறைப்படுத்தும் திட்டம் 2017

இத்திட்டத்தின் படி அறிக்கையாண்டில் 394 மனைகளுக்கு அபிவிருத்தி கட்டணம் ரூ.26101300/–ல் வசூல் செய்யப்பட்ட மனைகளுக்கு வரன்முறை செய்யப்பட்டுள்ளது.

## 47 தொழில்வரி

தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 திருத்தப்பட்ட சட்டப்பிரிவின்படி இம்மாநகராட்சி எல்லைக்குள் உள்ள வியாபாரிகள் தொழில் நிறுவனங்கள் அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களிடம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இதர தொழில் புரிபவர்களுக்கு தொழில்வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது. 2021–22ம் வருட தொழில்வரி வசூல் விவரம் கீழே குறிப்பிட்டுள்ளது. மொத்தம் 10431 வரிவிதிப்பு எண்கள் உள்ளது.

| | நிலுவை | நடப்பு |
|---|---|---|
| கேட்பு | 52295105 | 62766032 |
| வசூல் | 23370364 | 56740897 |
| நிலுவை | 28924741 | 6025135 |

| | |
|---|---|
| நிலுவை வசூல் சதவீதம் | 45% |
| நடப்பு வசூல் சதவீதம் | 91% |

## 48 பொது வருமானம்

### சொத்துவரி 81(1)(2)ன்படி

இம்மாநகராட்சியில் உள்ள அனைத்து கட்டிடங்களுக்கு வருட வாடகை மதிப்பீட்டின் பேரில் சொத்துவரி கீழ்க்கண்ட விதிகளின்படி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வரியினம் | கட்டிடங்களின் மீது அரையாண்டு விகிதம் | காலி நிலங்களின் மீது அரையாண்டு விகிதம் |
|---|---|---|
| 1.பொதுக் காரியங்களுக்கு வரி | 5.75% | 1.4% |
| 2.தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 5.25% | 1.8% |
| 3.நூலக வரி | 1.10% | 1.16% |
| 4.கல்வி வரி | 2.50% | 1.6% |
| மொத்தம் | 14.60% | 4.8% |

49 **வண்டி வாகன வரி**

நகரில் உள்ள வண்டி வாகனங்களுக்கு அறிக்கை ஆண்டில் வரவு ஏதும் இல்லை.

50 **முத்திரைத்தாள் வரி**

நகரில் பதிவு செய்ய விற்பனை செய்யப்படும் சொத்துக்களுக்கு வாங்கப்படும் முத்திரைத்தாள்கள் மூலம் அறிக்கை ஆண்டில் ரூ.47450448/–

51 **வரி விகிதம்**

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் மக்கள் தொகை 244518 ஆகும். இந்த அடிப்படையில் ஒரு நபருக்கு எல்லா வரியினங்களும் சேர்த்து விதிக்கப்பட்ட வரி ரூ.812.79 ஆகும். இது சென்ற ஆண்டில் ரூ.1992 ஆக இருந்தது. மொத்த சொத்துவரி விதிப்புகள் 91371 இதன் அடிப்படையில் ஒரு சொத்துக்கு விதிக்கப்பட்ட வரி ரூ.2175/– இது சென்ற ஆண்டு ரூ.2088/– ஆக இருந்தது.

52 **சொத்துவரி நிலுவை மற்றும் நடப்பு 2021–22**

| | நிலுவை | நடப்பு |
|---|---|---|
| கேட்பு | 107382988 | 1987418949 |
| வசூல் | 35785549 | 158967596 |
| நிலுவை | 71597439 | 39774252 |

நிலுவை வசூல் சதவீதம் 33.33%

நடப்பு வசூல் சதவீதம் 79.99%

53 **வரியில்லா இனம் (நிலுவை மற்றும் நடப்பு)**

| | நிலுவை | நடப்பு |
|---|---|---|
| கேட்பு | 89587680 | 27805189 |
| வசூல் | 17661526 | 9893747 |
| நிலுவை | 71926154 | 17911442 |

நிலுவை வசூல் சதவீதம் 19.71%

நடப்பு வசூல் சதவீதம் 35.58%

54 **வசூல் சதவீதம்**

| வரியினங்கள் | நிலுவை | நடப்பு |
|---|---|---|
| 1.சொத்துவரி | 33.33% | 79.99% |
| 2.தொழில்வரி | 44.69% | 90.40% |
| 3.வரியில்லா இனங்கள் | 19.71% | 35.58% |

55 **பொது நிதி**

2021–22ம் ஆண்டு ஆரம்ப இருப்பு ரூ.273059863/– ஆகும். அறிக்கை ஆண்டில் வரவு ரூ.738407048/– ஆகும். செலவு ரூ.525861871/– ஆகும். ஆண்டு இறுதியில் கையிருப்பு ரூ.212545177/–

56 **முதலீடுகள்**

இம்மாநகராட்சியில் அறிக்கை ஆண்டில் 74.53 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

57 **தணிக்கைத் தடைகள்**

மாநகராட்சியின் ஆண்டு கணக்குகள் 2021–22ம் ஆண்டிற்குரியது தணிக்கை துறையினருக்கு அனுப்பப்பட்டு தணிக்கை நடைப்பெற்று வருகிறது.

| | |
|---|---|
| 1.04.2021 நிலுவையில் இருந்தது | 407 |
| 2019–20ம் அறிக்கையின் படி | 162 |
| | --- |
| மொத்தம் | **569** |
| | --- |
| முடிவை செய்யப்பட்டவை | 72 |
| | --- |
| ஆண்டு இறுதியில் உள்ள தணிக்கை தடைகள் | 497 |
| | --- |

58 **சொத்து மதிப்பும் பொருளாதாரமும்**

இம்மாநகராட்சியில் சொத்து மதிப்பு ரூ.4502261419/– ஆகவும் கொடுக்க வேண்டிய கடன் தொகை மதிப்பு ரூ.4473437580/– ஆகவும் உள்ளது.

59 **கொடி நாள் இலக்கு**

2021–22ஆம் ஆண்டுக்கு கொடி நாள் இலக்கு ரூ.200000/– நிர்ணயம் செய்யப்படுவதை வசூல் செய்யப்பட்டது.

60 **குடும்பநலத் திட்டம்**

குடும்பநலத் திட்டம் இம்மாநகராட்சியில் செயல்பாட்டில் இல்லை.

## 61 கணிணி மயமாக்குதல்

இம்மாநகராட்சியில் 2004–2005ம் ஆண்டு முதல் அலுவலகப்பணிகள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டு வருகிறது. சொத்துவரி, குடிநீர் கட்டணம், வரியில்லா இனங்கள், தொழில்வரி, பிறப்பு, இறப்பு, திட்ட அனுமதி, கட்டிட உரிமம், வணிக உரிமம் போன்ற இனங்கள் கணினி மயமாக்கப்பட்டு ரசீதுகள், சான்றிதழ்களும் அலுவலகத்திலுள்ள மக்கள் சேவை மையம் (CFC Center) மூலம் தினமும் 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை வழங்கப்பட்டு வருகிறது.

பொது மக்கள் எளிதில் வரி செலுத்தும் வகையில் மாநகரில் 6 வரி வசூல் மையங்களும் அலுவலகத்தில் 1 வரி வசூல் மையமும் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மேலும் மக்கள் தங்கள் விண்ணப்பங்கள் பதிவு செய்யவும் கட்டண நிலுவைகள் செலுத்தவும் மற்றும் துறை சார்ந்த குறைபாடுகளை உடனுக்குடன் தெரிவிக்கவும் 24x7 வலைதள சேவை https://tnurbanepay.tn.gov.in வழங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

அலுவலகத்தின் அனைத்து வரவுகளும் கணிப்பொறி மூலம் வசூல் செய்யப்பட்டு கணினி இரசீது வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் அலுவலகத்தின் அனைத்து வரவுகள் மற்றும் செலவினங்கள் கணிப்பொறி மூலம் பதியப்பட்டு மாநகராட்சியின் வரவு செலவுப் பட்டியல் மற்றும் வரவு, செலவு கணக்குகள் (புதிய இயல்பு நிலை கணக்குகள்) விவரங்கள் கணினி மூலம் பதியப்பட்டு வருகிறது.

மேலும் மாநகராட்சியினை பற்றிய பொதுவான தகவல்களை தெரிந்துகொள்ள இணைய தளம் htts://tnurbantree/hosur/ என்ற இணையதளம் செயல்பட்டு வருகிறது.

ஆணையாளர்
ஒசூர் மாநகராட்சி